NYBORG TAMILSK SPORTS KLUB

நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம்



40 ஆவது ஆண்டுவிழாச்சிறப்பிதழ்

40 ÅRS JUBILÆUMSSPECIALUDGAVE

உள்ளடக்கம் / indhold

ஒருங்கிணைப்பாளர் உரை	3
Koordinatorens ord	4
தலைமையுரை	5
Formandens ord	6
வாழ்த்துரை	7
Hilsentale	9
தொகுப்புரை	11
Redaktørens forord	12
நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்தின் வரலாறு	13
Historien om Nyborg Tamilsk Sports Klub	21
நிர்வாகசபை	27
Bestyrelse	27
யாப்பு	61
Vedtægter	61
பூப்பந்தாட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்ட சாதனை வீரர்கள் பட்டியல்	71
Listen over de rekordholdere der har opnået førstepladsen i Badminton	71
கால்பந்து சாதனை வீரர்கள் பட்டியல்	72
Liste over fodboldens rekordspillere	72
கரப்பந்து சாதனை வீரர்கள் பட்டியல்	73
Liste over volleyboldens rekordspillere	73
சாதனையாளர்களின் காட்சிகள்	75
Udstilling af præstationer	75
Hovedsponsor	80
Medsponsor	81
40 ஆவது ஆண்டு விழாவிற்கு அனுசரணை வழங்கியோர்	84
Sponsor til 40 års jubilæum	84
சாதனையாளர்களின் காட்சிகள்	85
Udstilling af præstationer	85

நிர்வாகசபை 2025

செல்வக்குமரன் தனபாலசிங்கம்
ராம்குமார் இரத்னசோதி
ஞானேஸ்வரன் இராதாகிருஷ்ணன்
பவானந்தன் நடராசா
ஜெயந்தன் ஜெயமனோகரன்
ராஜ்குமார் தனபாலசிங்கம்
ஞானசீலன் மரியாம்பிள்ளை
அசோக்குமார் செல்வராஜா
நிகான் ஞானசீலன்
ஜெயதரன் செல்லையா
ராகுராம்இரத்னசோதி
நவநீசன் சோமசுந்தரம்
சத்தியசீலன் சிவகுரு
குபேரன் குலவீரசிங்கம்

40 ஆவது ஆண்டு விழாக்குழு

ஒருங்கிணைப்பாளர்கள்.

குகனேஸ்வரன் இராதாகிருஷ்ணன்
றொபேட்கெனடி அந்தோனிப்பிள்ளை
செல்வராஜா அருளப்பு
தார்நிகன் சந்திரகுமார்
சுறேஸ்காந் தெய்வேந்திரம்
தெட்சணாமூர்த்தி தங்கவடிவேலு
நாகரட்ணம் பொன்னுத்துரை
மயில்வாகனம் வேலன்
சிவஜந்தன் சிவராஜசிங்கம்

40 ஆவது ஆண்டு விழாக்குழு

ஒருங்கிணைப்புக்குழு

உறுப்பினர்கள்.

சிறிமுருகன் பொன்னம்பலம்
லின்ரன் றூபஸ் செபஸ்தியாம்பிள்ளை
உதயகுமார் சற்குணசிங்கம்
சந்திரகுமார் குமாரசாமி
முரளிதரன் பாலசுப்பிரமணியம்
வதனி சிறிமுருகன்
குபேரன் குலவீரசிங்கம்
விஜெயதுரை நடேசன்
கார்த்திகேயன் நடராஜன்

ஒருங்கிணைப்பாளர் உரை

நியுபோ தமிழர் விளையாட்டு கழகத்தின் 40 ஆவது ஆண்டு விழா. இந்த நூல், சொற்களும் படங்களும் இணைந்த ஒரு சாதாரணத் தொகுப்பு அல்ல, அது நாற்பது ஆண்டுகளாகப் பரவி நிற்கும் அர்ப்பணிப்பு, ஒற்றுமை , விடா முயற்சியின் உயிர்ப்புமிக்க சாட்சியாகும்.

நான்கு தசாப்தங்களாக, இந்தக் கழகம் தலைமுறைகளைத் தாண்டி மக்களை இணைக்கும் வலுவான பாலமாக திகழ்ந்து வருகிறது. இது வெறும் விளையாட்டு சாதனைகளுக்கான தளமாக மட்டுமல்லாது, இதயங்களை இணைக்கும் உறவுகளின் தாயகமாகவும் விளங்கியுள்ளது. ஒவ்வொரு நிகழ்வின் பின்னாலும், ஒவ்வொரு போட்டியின் ஆழத்திலும்,தன்னார்வம், அர்ப்பணிப்பு மற்றும் பொது மதிப்புகளால் நெய்யப்பட்ட எண்ணற்ற கதைகள் ஒளிந்திருக்கின்றன. இந் நூல், இந்தப் பயணத்தில் தங்கள் தடங்களை பதித்த அனைவரையும் நினைவு கூரும் நோக்கில் உருவாக்கப்பட்டது. குறிப்பாக, எங்கள் ஒருங்கிணைப்புக் குழுவினரும் பொறுப்பாளர்களும் கழகத்திற்காக பின்னின்று உழைத்தாலும் கழகத்தை நிலைநிறுத்திய தூண்கள் என்றால் மிகையில்லை.அவர்களின் ஒழுங்கும், பொறுப்புணர்வும், அசைக்க முடியாத அர்ப்பணிப்பும், காலத்தின் ஓட்டத்தில் தொடர்ச்சியையும் தரத்தையும் காக்கும் அடித்தளமாக இருந்து வருகின்றன. மேலும், கடந்த காலத்திலும் தற்போதைய காலத்திலும் தங்கள் நேரம், உழைப்பு மற்றும் உண்மையான பற்றோடு பணியாற்றிய தன்னார்வலர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். அவர்களின் ஆர்வமும் அர்ப்பணிப்பும் இல்லையெனில், இந்த வரலாறு உருவாகியிருக்காது.

இந்த நூல், கழகத்தின் வளர்ச்சிப் பாதையை, அதன் முக்கிய மைற்கற்களை மற்றும் அதை முன்னேற்றிய உயர்ந்த மதிப்புகளை வெளிப்படுத்துகிறது. இது கடந்த காலத்தைப் பதிவு செய்வதைக் கடந்தும், எதிர்காலத்தை நோக்கி ஒளி வீசுகிறது அங்கு ஒற்றுமை, கலாசாரம் மற்றும் விளையாட்டு என்றும் மையமாக விளங்கும்.இந்த நாற்பது ஆண்டுகளின் உழைப்பைச் சுமந்த இந்தப் பயணம், வருங்கால தலைமுறைகளின் உள்ளத்தில் தீபமாக ஒளிர்ந்து, இதே பணியையும் பாரம்பரியத்தையும் தொடர்ந்து முன்னெடுக்க ஊக்குவிக்குமென எங்கள் உறுதியான நம்பிக்கை.

பெருமையுடனும் மிகுந்த நன்றியுடனும்.

குகனேஸ்வரன் இராதாகிருஷ்ணன்
முதன்மை ஒருங்கிணைப்பாளர்
40 ஆவது ஆண்டு விழாக்குழு.

Bestyrelse 2026

Selvakumaran Thanabalasingam
Ramkumar Ratnasothy
Gnanaeswaran Radhakrishnan
Bavananthan Nadarasa
Jeyanthan Jeyamanokaran
Rajkumar Thanabalasingam
Gnanaseelan Mariyampillai
Asokkumar Selvarajah
Nikaan Gnanaseelan
Jeyatharan Selliah
Raguram Ratnasothy
Navaneesan Somasundarm
Sathiyaseelan Sivaguru
Kuberan Gulaveerasingam

40-års jubilæumsudvalget Koordinatorer.

Kuganeswaran Radhakrishnan
Robert Kennedy Anthonipillai
Selvarajah Arullappu
Tharnigan Chandrakumar
Sureshkanth Thaivendram
Thedchanamoorthy Thangavadivelu
Nagaratanam Poonuthurai
Mylvaganam Velan
Sivajanthan Sivarajasingam

40-års jubilæumsudvalget Arbejdsgruppen.

Srimurugan Ponnampalam
Linton Ruban Sabestaimpillai
Uthayakumar Satkunasingam
Chandrakumar Kumarasamy
Muraleetharan Balasubramaniam
Vathany Srimurugan
Kuberan Gulaveerasingam
Vijayathurai Nadesan
Karthikeyan Nadarajan

Koordinaeorens ort

40 års jubilæum for Nyborg Tamilsk Sportsklub.
Denne bog er mere end en samling af ord og billeder.
Den er et vidnesbyrd om 40 års dedikation, fællesskab og vedholdenhed i vores tamilske sportsklub.

Gennem fire årtier har klubben været et samlingspunkt for mennesker på tværs af generationer. Den har skabt rammerne for både sportslige præstationer og stærke sociale bånd. Bag hver aktivitet, hver kamp og hvert arrangement ligger der en historie – en historie om frivillighed, engagement og fælles værdier.

Denne udgivelse er også en hyldest til de mange mennesker, som har bidraget til klubbens rejse. Særligt vores koordinatorgruppe og de ansvarlige, hvis indsats ofte foregår bag kulisserne, men som er afgørende for, at klubben fungerer og udvikler sig. Deres struktur, ansvarsfølelse og engagement har været med til at sikre kontinuitet og kvalitet gennem årene.

Vi ønsker samtidig at anerkende alle frivillige, trænere og medlemmer – både nuværende og tidligere – som har sat deres præg på klubben. Uden deres indsats og passion ville denne historie ikke eksistere.

Bogen giver et indblik i klubbens udvikling, dens milepæle og de værdier, der har båret den frem. Den fortæller ikke kun om fortiden, men peger også fremad mod en fremtid, hvor fællesskab, kultur og sport fortsat vil være i centrum.

Det er vores håb, at denne bog vil inspirere kommende generationer til at videreføre det arbejde og den ånd, som har præget klubben gennem 40 år.
Med stolthed og taknemmelighed

Kuganeswaran Radhakrishnan
Ansvarlig (admin) / Tovholder
40-års jubilæumsudvalget.

தலைமையுரை

நாற்பது ஆண்டுகள் என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாக மட்டுமல்ல, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் என்ன சாதிக்க முடியும் என்பதற்கான உயிருள்ள சான்றாகும்.

நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் என்பது தலைமுறைகள் வழியாக வளர்ந்த ஒரு குடும்பம் போன்றது.

என் சொந்த வாழ்க்கை வரலாறும் NTSK வுடன் நெருங்கிய தொடர்புடையது. நான் டென்மார்க்கிற்கு வந்த நாளிலிருந்து, இந்தக் கழகத்துடன் சேர்ந்தே வளர்ந்தேன். இந்தக் கழகம் வளர்ந்ததோடு என்னையும் என்னைப்போன்ற பலரையும் நல்ல விளையாட்டு வீரர்களாக உருவாக்கியிருக்கிறதென்றால் மிகையில்லை. முன்னைய தலைமுறைகள் உறுதி மற்றும் பொறுமையுடன் இந்த அமைப்பின் அடித்தளத்தை உருவாக்கியதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு இளம் உறுப்பினராகத் தொடங்கி இன்று தலைவர் என்ற பொறுப்பை ஏற்கும் வரை வந்த இந்த பயணம் எனக்கு பல பாடங்களைக் கற்றுத்தந்தது. இப்போது அடுத்த தலைமுறைகள், எங்கள் முன்னோர்கள் அமைத்த அந்த வலுவான அடித்தளத்தின் மேல் தொடர்ந்து நாம் கட்டியெழுப்புவதைக் காண்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆண்டுகள் கடந்தும் NTSK எண்ணற்ற வெற்றிக் கோப்பைகளை வென்றுள்ளது. முன்னைய சாதனைகளை எங்கள் கழகம் பேசுகிறது. அதே சமயம் நாங்கள் புதுமையையும் ஏற்றுக்கொண்டு, புதிய உறுப்பினர்கள் தொடர்ந்து இணையும் வகையில் பல மாற்றங்களையும் புதிய முயற்சிகளையும் முன்னெடுத்ததில் நான் பங்கெடுத்ததற்கு பெருமைப்படுகிறேன்.

"NTSK இனி ஒரு விளையாட்டு கழகம் மட்டும் அல்ல – அது நியுபோர்க் தமிழர்களின் ஒற்றுமைக்கு அடையாளமாக உள்ளது." இந்த நிலையை அடைந்ததற்கு காரணம் எங்கள் வலுவான ஒத்துழைப்பே ஆகும் எங்கள் பணியை சாத்தியமாக்கும் நம்பிக்கையான ஒத்துழைப்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் கழகத்தலைவராக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நியுபோர்க் தமிழ் மக்கள் பேராதரவு தந்துள்ளார்கள்.

NTSK உறுப்பினர்கள் தான் இந்தக் கழகத்தின் உயிராக உள்ளார்கள்.

தன்னார்வலர்களின் அர்ப்பணிப்பு, பொருளாதார உதவிகள் எங்கள் கழகத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துகிறது அத்தோடு என் நிர்வாகக்குழுவினரும் விழாக்குழுவினரும் தங்கள் கடின உழைப்பைக் கொடுத்துள்ளார்கள். எங்கள் கழகத்தின் எல்லா வெற்றிகளிலும் அனைவருக்கும் பங்குண்டு ஆகவே எல்லோருக்கும் மனமார்ந்த நன்றி.

இன்று நாம் பெருமையுடன் கடந்த காலத்தை நினைவுகூரும் போதும், நான் இன்னும் அதிகமாக எதிர்காலத்தை நோக்கி பார்க்கிறேன். நமது வலுவான ஒத்துழைப்பை தொடர்ச்சியாக வளர்த்து, வருகின்ற ஆண்டுகளில் இந்தக் கழகத்தை மேலும் முன்னேற்றவேண்டுமென விரும்புகிறேன்.

இந்நாற்பதாண்டு கழக வரலாற்றை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்த நினைவு மலரை வெளியிடுவதில், கழகத் தலைவராக நான் பேருவகை அடைகிறேன். இந்நினைவு மலரில் இடம்பெற்றுள்ள அனைத்து விடயங்களும், நிர்வாகக் குழுவினராலும் விழாக்குழுவினராலும் கலந்துரையாடப்பட்ட பின்னரே வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த கால வரலாற்றை மிகத் துல்லியமாகப் பதிவு செய்வதற்காக, அது குறித்து நன்கு அறிந்த பலரிடம் தகவல்கள் கேட்கப்பட்டு, அவர்களின் பங்களிப்போடு இந்த மலர் உருவாக்கப்பட்டுள்ளது

நாம் நாற்பதாண்டு விழாவைக் கொண்டாடி, நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்திற்கு இன்னும் வலுவான எதிர்காலத்தை உருவாக்கும் ஒரு புதிய தொடக்கமாக மாற்றுவோம்.

செல்வக்குமரன் தனபாலசிங்கம்

தலைவர்

நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் (NTSK)

Formandens ord

40 år med stærke rødder

Kære medlemmer, samarbejdspartnere og venner af Nyborg Tamilsk Sportsklub (NTSK)

Det er med stor respekt for vores fælles historie og en dyb personlig stolthed, at jeg som formand byder jer velkommen til vores 40-års jubilæum. Fire årtier er ikke blot en historisk milepæl; det er et levende bevis på, hvad vi som fællesskab kan opnå, når vi forener vores kræfter og værdier.

En fælles opvækst gennem generationer

Min egen historie er tæt forbundet med NTSK. Siden jeg ankom til Danmark, har jeg haft min opvækst i og sammen med klubben. Jeg har set klubben forme sig, præcis som den har været med til at forme mig som menneske.

Jeg har oplevet, hvordan de tidligere generationer byggede fundamentet med vilje og vedholdenhed. Rejsen fra at være et ungt medlem til i dag at bære ansvaret som formand har været lærerig og båret af et dybt engagement. Det er en stor glæde at se, hvordan de næste generationer nu bygger videre på det fundament, vores forgængere skabte.

Resultater, modernisering og identitet

Igennem årene har NTSK opnået utallige pokaler, og vores sportslige resultater taler for sig selv. Men vi har også formået at forny os. Jeg er stolt over at have været med til at drive de forandringer og nye tiltag, der har sikret en løbende tilgang af nye medlemmer.

"NTSK er ikke længere blot en sportsklub – det er selve hjertet i Nyborg-tamilernes identitet."

En fælles tak for resultaterne

Denne position har vi kun opnået gennem et stærkt samarbejde. Jeg vil rette en stor tak til:

* ***Vores loyale samarbejdspartnere og sponsorer,*** *der gør vores arbejde muligt.*
* ***Det tamilske samfund i Nyborg*** *for jeres uundværlige opbakning.*
* ***NTSK's medlemmer****, som er klubbens hjerteblod.*
* ***De frivillige****, der yder en kæmpe indsats. Jeres engagement sikrer det fundament, vi driver klubben på.*
* ***Min bestyrelse og jubilæumsudvalget*** *for jeres utrættelige indsats og tillid.*

Mod nye mål

Selvom vi i dag ser tilbage med stolthed, retter jeg i endnu højere grad blikket mod fremtiden. Jeg ønsker at videreføre vores stærke samarbejde, så vi sammen kan nå nye mål og udvikle klubben yderligere i de kommende år.

Det er en stor glæde for mig som formand at præsentere dette jubilæumsskrift, der dokumenterer klubbens 40-årige historie. Indholdet er i 2026 blevet grundigt gennemgået og godkendt af både bestyrelsen og jubilæumsudvalget. For at sikre en retvisende fortælling er en lang række personer med kendskab til klubbens fortid blevet hørt, og deres bidrag danner grundlaget for denne udgivelse.

Lad os fejre de første 40 år som et afsæt for en endnu stærkere fremtid for Nyborg Tamilsk Sportsklub.

Selvakumaran Thanabalasingam
Formand,
Nyborg Tamilsk Sportsklub (NTSK)

வாழ்த்துரை

40 ஆண்டு கால NTSK ஒரு நினைவு.
கழகத்தின் தொடக்கமும் அதன் முக்கியத்துவமும்

நியுபோர்க் தமிழ் விளையாட்டுக் கழகம் (NTSK), 1986 ஆம் ஆண்டு நியுபோர்க்கில் இருந்த புலம்பெயர்ந்த தமிழர்களால் தொடங்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே இது வெறும் விளையாட்டுக் கழகமாக மட்டுமன்றி, ஒரு முக்கியமான சந்திப்பு மையமாகவும் விளங்கியது. விளையாட்டு, சமூகம் மற்றும் பரஸ்பர உதவி ஆகியவற்றின் மூலம் ஒரு புதிய நாட்டில், புதிய அன்றாட வாழ்வில் பாதுகாப்பையும், ஒற்றுமையையும், ஒரு கட்டமைப்பையும் உருவாக்க இது உதவியது.

நான் 1987 ஆம் ஆண்டு, நான்கு வயது சிறுவனாக எனது குடும்பத்துடன் நியுபோர்க் வந்தடைந்தேன். இன்று, 39 ஆண்டுகளுக்குப் பிறகு, அதே கழகத்தின் செயலாளராகப் பணியாற்றும் பெருமை எனக்குக் கிடைத்துள்ளது. எனது சொந்த அனுபவங்கள் மற்றும் இந்த 40 ஆண்டு கால வரலாற்றின் ஊடாகக் கழகத்தின் வளர்ச்சியைத் திரும்பிப் பார்ப்பது எனக்கு ஒரு சிறப்பான பார்வையை வழங்குகிறது.

Fyn Cup உம் சமூக ஒற்றுமையும்

ஆரம்ப கால நினைவுகள் இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளன. குறிப்பாகப் 'போர்கர்ஸ்கோவ்' பள்ளியில் (Borgerskovskolen) நடைபெற்ற Fyn Cup போட்டிகள், Fyn தீவு முழுவதும் உள்ள தமிழர்கள் ஒன்று கூடும் முக்கிய இடமாக இருந்தது. குழந்தைகளுக்கு அது விளையாட்டு ,சமூக உறவுகள் நிறைந்த நீண்ட நாட்களாக அமைந்தது. பெரியவர்களுக்கு இது ஒருவருக்கொருவர் ஆதரவையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் இடமாக இருந்தது.
குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் Fyn Cup என்பது ஒரு போட்டியைத் தாண்டி, மகிழ்ச்சியையும் ஒரு பிணைப்பையும் ஏற்படுத்திய அனுபவம். இன்று நாம் கொண்டாடும் இந்த ஒற்றுமைக்கான விதைகள் அங்கேயே விதைக்கப்பட்டன என்பது எனது தனிப்பட்ட கருத்து.

வளர்ச்சிக் காலம்

பல ஆண்டுகளாக நான் NTSK இன் ஒரு பகுதியாக இருந்துள்ளேன் - முதலில் ஒரு குழந்தையாக, பின்னர் ஒரு வீரராக, இப்போது பல ஆண்டுகளாக நிர்வாகக் குழுவில் உறுப்பினராக. இது கழகத்தின் வளர்ச்சியை மிக நெருக்கமாகக் கவனிக்க எனக்கு வாய்ப்பளித்தது. காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்வதே NTSK இன் மிகப்பெரிய பலம். ஆரம்பத்தில் ஒரு முறைசாரா அமைப்பாகத் தொடங்கி, இன்று தெளிவான விதிகள், நடைமுறைகள், டிஜிட்டல் தீர்வுகளுடன் ஒரு தொழில்முறை அமைப்பாக இது வளர்ந்துள்ளது.
அதே நேரத்தில், கழகம் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளது. தொடக்க காலத்தை விட இன்று உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு முறையான மேலாண்மையும் பொறுப்பான தலைமைத்துவமும் அவசியமாகிறது. இந்த வளர்ச்சியைக் கண்டு

நான் பெருமிதம் கொள்கிறேன்.

அடையாளமும் சொந்த வீரர்களும்

இன்று NTSK ஒரு சிறந்த முறையில் இயங்கும், கட்டுக்கோப்பாகவும் நிதி ரீதியாகவும் வலுவான கழகமாகத் திகழ்கிறது. ஆனால் நான் தனிப்பட்ட முறையில் பெருமைப்படுவது என்னவென்றால், எப்போதும் எமது சொந்த உறுப்பினர்களைக் கொண்டே போட்டிகளில் களம் காண்பது என்ற எமது கொள்கையைத்தான். நாம் எமது அடையாளத்தை ஒருபோதும் விட்டுக்கொடுப்பதில்லை. எனவே, நாம் பெறும் ஒவ்வொரு வெற்றியும், அது தங்கப் பதக்கமாக இருந்தாலும் சரி அல்லது ஒரு காலிறுதிப் போட்டியாக இருந்தாலும் சரி, அது எமது சொந்த உழைப்பால் கிடைத்தது என்ற பெருமை எங்களுக்கு உண்டு.

தலைமுறைகளும் எதிர்காலப் பொறுப்பும்

கழகத்தின் ஆரம்ப கால முன்னோடிகளையும் இன்றைய இளம் தலைமுறையினரையும் ஒரே சமூகக் கட்டமைப்பின் கீழ் ஒன்றிணைப்பது ஒரு பெரிய சாதனை. NTSK இன்று ஒரு விளையாட்டுக் கழகத்தைத் தாண்டி, நியுபோர்க்கில் உள்ள எமது சொந்தக் கழகமாக மாறியுள்ளது. எமக்கு முன்னால் இருந்தவர்கள் எமக்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது போல, ஆரோக்கியமானதும் வலுவான துமான இந்தக் கழகத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் பொறுப்பு எமக்கு உள்ளது.

சமூகத்திற்கு நன்றி

இறுதியாக, கடந்த பல ஆண்டுகளாக நியுபோர்க் தமிழ் விளையாட்டுக் கழகத்தின் ஒரு பகுதியாக இருந்த உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், நிர்வாகக் குழுவினர், முன்னோடிகள், ஆதரவாளர்கள் மற்றும் நியுபோர்க் வாழ் தமிழர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும் NTSK இன் வரலாற்றிலும் அதன் எதிர்காலத்திலும் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாவீர்கள் .

இனிய 40-ஆவது ஆண்டு நிறைவு விழா வாழ்த்துகள்.

ராம்குமார் இரத்னசோதி
செயலாளர்.
நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் (NTSK)

Hilsentale

Et jubilæumsforord 40 år med NTSK
Klubbens begyndelse og betydning.

Nyborg Tamilsk Sportsklub blev stiftet i 1986 af tamilske flygtninge i Nyborg og har siden udviklet sig til meget mere end blot en idrætsforening. Klubben blev fra begyndelsen et vigtigt samlingspunkt, hvor sport, fællesskab og gensidig støtte bidrog til tryghed, sammenhold og struktur i en ny hverdag og i et nyt land.

Jeg kom selv til Nyborg året efter, i 1987, som fireårig, familiesammenført til det fællesskab, der allerede var ved at tage form omkring NTSK. I dag, 39 år senere, har jeg den ære at sidde som sekretær i den samme klub. Det giver et særligt perspektiv at kunne se tilbage på klubbens udvikling, både gennem egne erfaringer og gennem den fælles historie, som dette 40 års jubilæum markerer.

Fyns Cup og fællesskabet.

Minderne fra de tidlige år står stadig tydeligt for mig. Særligt Fyns Cup på Borgerskovskolen husker jeg som et vigtigt samlingspunkt, hvor tamiler fra hele Fyn mødtes. For os børn betød det lange dage med masser af bevægelse og fællesskab, primært som tilskuere til kampene og som en del af livet omkring turneringen. For de voksne var det et sted, hvor sammenhold og opbakning var i centrum.

For børn og unge var Fyns Cup langt mere end en turnering. Det var oplevelser, der skabte glæde, nærvær og en tidlig følelse af tilhørsforhold. Set i bakspejlet er jeg ikke i tvivl om, at det var her, de første frø til det sammenhold, vi fejrer i dag, efter min personlige mening blev sået.

En udviklingsperiode.

Gennem årene har jeg været en del af NTSK på mange måder, først som barn, senere som aktiv spiller og gennem mange år som en del af bestyrelsesarbejdet. Det har givet mig et indgående kendskab til klubbens udvikling. En af NTSKs store styrker har været evnen til at følge med tiden. Klubben er gået fra en mere uformel tilgang til i dag at være en professionelt drevet forening med klare rammer, tydelige procedurer og et solidt regel og lovgrundlag. I dag arbejder klubben med klare strukturer og digitale løsninger som en naturlig del af den daglige drift. Samtidig er NTSK vokset markant. Medlemstallet er i dag mere end tredoblet sammenlignet med klubbens første år. Denne vækst har stillet større krav til organisering, systematik og ansvarlig ledelse, end da klubben bestod af langt færre medlemmer. Det er en udvikling, jeg er både imponeret over og stolt af, og som vidner om en klub, der tager ansvar og udvikler sig med tiden.

Identitet og egne spillere.

I dag kan NTSK med rette betegnes som en velfungerende, disciplineret og økonomisk solid klub. Men det, jeg personligt er allermest stolt af, er klubbens faste princip om altid at stille op med egne medlemmer. I NTSK går vi ikke på kompromis med vores identitet. Derfor føles enhver sportslig præstation som en sejr, uanset om det er guldmedaljer, en tredjeplads eller en kvartfinale. Resultaterne er skabt med NTSKs egne kræfter, og den stolthed, der følger med, er noget, vi har opbygget over tid gennem fællesskab, loyalitet og kontinuitet, og som vi i dag bygger videre på.

Generationer og ansvar for fremtiden.

Det er en stor bedrift, at klubben i dag formår at samle både pionererne fra de første år og den helt unge generation under samme fællesskab. NTSK er blevet mere end en idrætsforening og opleves for os alle som en del af vores fælles identitet i Nyborg.
Ligesom vi selv fik et solidt fundament af dem, der gik forrest, har vi i dag ansvaret for at give en stærk og sund klub videre til kommende generationer. Jeg er overbevist om, at NTSK også fremover vil fortsætte med at udvikle sig både sportsligt, organisatorisk og menneskeligt.

Tak til fællesskabet.

Afslutningsvis vil jeg rette en stor og oprigtig tak til alle, der gennem årene har været og fortsat er en del af Nyborg Tamilsk Sportsklub, pionerer, medlemmer, bestyrelser, frivillige, supporters og alle tamiler i Nyborg, som gennem tiden har støttet klubben. I er alle en uundværlig del af NTSKs historie og dens fremtid.

Rigtig godt 40 års jubilæum.

Ramkumar Ratnasothy
Sekretær
Nyborg Tamilsk Sportsklub (NTSK)

தொகுப்புரை

நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் தனது 40ஆவது ஆண்டை நிறைவு செய்திருப்பது எமக்கெல்லாம் பெருமைக்குரிய விடயமாகும்.

எமது கழகத்தின் வரலாறும், அதன் வளர்ச்சிக்காக உழைத்தவர்களின் தகவல்களும் அடங்கிய ஒரு தொகுப்பை வெளியிட வேண்டும் என்ற எங்கள் அனைவரின் நீண்டநாள் கனவு இன்று நனவாகியிருக்கிறது. நியுபோ தமிழர் விளையாட்டு கழகத்தின் முன்னாள் விளையாட்டு வீரனான எனக்கு 40 ஆவது ஆண்டு விழாக்குழுவின் நிகழ்ச்சிப்பொறுப்பாளராக இந்நூலைத் தொகுக்கும் வாய்ப்பு கிடைத்தது உவகை அளிக்கிறது.

இந்த ஆண்டில் எமது கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இவ்வாவணப் பதிவு வெளியிடப்படுவது மிகவும் தேவையானதாகும். ஏனெனில் 18, 20 வயதுகளில் நியுபோவிற்கு வந்த எங்களில் பலர் இன்று 60 வயதைத் தாண்டிய நிலையில் உள்ளோம். எமது கழகத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளிடமும் அடுத்த தலைமுறையிடமும் கையளிக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் பல சிக்கல்களைக் கடந்து கழகத்தை ஆரம்பித்து, தொடர்ந்து 40 ஆண்டுகளாக சிறப்பாக நடத்தி வருகிறோம். இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த நியுபோ தமிழர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் கழகத் தொண்டர்களாகவும், அங்கத்தவர்களாகவும், நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தங்கள் காலகட்டங்களில் சிறப்பாக பணியாற்றியதன் பயனாகவே இன்று மூன்று தலைமுறைகளைத் தாண்டியும், மூன்று விளையாட்டுகளுடனும், முழுமையான கட்டமைப்புகளுடனும் எமது கழகம் செயற்பட்டு வருகிறது.

சொந்த நாட்டை விட்டு புலம்பெயர்ந்த எமக்குப் விளையாட்டு, தமிழ்ச்சமூக வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியிருக்கிறதென்றால் மிகையல்ல. விளையாட்டின் மூலம் ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், நட்பு போன்ற நற்பண்புகள் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறான நற்பண்புகள் நியுபோ தமிழ்ச்சமூகத்தில் இருப்பது கண்கூடு.

எமது அடுத்த தலைமுறையினர் தமிழர்களாக ஒன்றுபட்டு, தமக்குள் நட்பை வளர்த்து, மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பேணுவதற்கு இக்கழகம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை

எமது விளையாட்டுக் கழக வரலாற்றை எழுதி, இச்சிறிய இதழைத் தொகுப்பதற்கு பலர் பல வழிகளில் உதவி செய்துள்ளனர். எமது கழக மூத்த உறுப்பினர்கள், பழைய மற்றும் புதிய விளையாட்டு வீரர்கள், 40ஆவது ஆண்டு விழா குழு உறுப்பினர்கள், மற்றும் 2026ஆம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

சிறப்பாக கடந்த காலத்திலிருந்து இவ்வாண்டு வரை நிர்வாக சபை உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களையும், கழகத்தின் பல்வேறு பதிவுகளையும் திரட்டி என்னுடன் இணைந்து உழைத்த திரு. பவானந்தன் நடராஜா, திரு. ஞானசீலன் மரியாம்பிள்ளை மற்றும் அட்டைப்பட வடிவமைப்பு மற்றும் டென்மார்க் மொழிபெயர்ப்பில் உதவிய செல்வன் தார்நிகன் சந்திரகுமார் அவர்களுக்கும் என் நன்றிகள்.

நியுபோ தமிழர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையினர் எமது கழகத்தை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுப்பார்கள் என்ற அவாவும் நம்பிக்கையும் எனக்குண்டு. 40ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எமது நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகம் (NTSK) பல்லாண்டு காலம் சிறப்பாக இயங்க வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகிறேன்.

நன்றி.

றொபேட்கெனடி அந்தோனிப்பிள்ளை

நிகழ்ச்சிப் பொறுப்பாளர்

40 ஆவது ஆண்டு விழாக்குழு.

Redaktørens forord

Det er en stor stolthed for os alle, at Nyborg Tamilsk Sports Klub (NTSK) har nået sit 40-års jubilæum.
Vores fælles, mangeårige drøm om at udgive en bog, der indeholder vores forenings historie samt fortællinger om de personer, der har arbejdet for dens udvikling, er i dag blevet til virkelighed.
Som tidligere spiller i Nyborg Tamilsk Sports Klub har jeg haft den glæde at få muligheden for at udarbejde denne bog i min rolle som programansvarlig på 40-års jubilæumsudvalget.
I forbindelse med markeringen af foreningens 40-års jubilæum i år er udgivelsen af denne historie særligt vigtig. Mange af os, der kom til Nyborg som 18-20-årige, er i dag over 60 år. Derfor er det vigtigt, at vi videregiver vores forenings historie til vores børn og til de kommende generationer.
På trods af de mange udfordringer dengang, blev foreningen etableret, og gennem 40 år er den blevet drevet på fremragende vis. Alle tamilere i Nyborg, der har bidraget til foreningens udvikling, fortjener stor anerkendelse. Gennem deres indsats som frivillige, medlemmer og bestyrelsesmedlemmer igennem årene er det lykkedes, at foreningen i dag fungerer på tværs af tre generationer, med tre sportsgrene og en solid organisatorisk struktur.
For os, der er udvandret fra vores hjemland, har sport spillet en vigtig rolle i udviklingen af det tamilske samfund. Gennem sport udvikles gode værdier som fællesskab, kompromis og venskab. Det er tydeligt, at disse værdier findes i det tamilske samfund i Nyborg.
Der er ingen tvivl om, at denne forening vil hjælpe den næste generation med at stå sammen som tamilere, styrke deres indbyrdes relationer samt bevare sprog og kultur.
Mange har bidraget på forskellige måder til at skrive vores forenings historie og skabe denne bog. Jeg vil gerne rette en hjertelig tak til vores ældre medlemmer, både tidligere og nuværende spillere, medlemmerne af 40-års jubilæumsudvalget samt bestyrelsen for 2026.
En særlig tak til hr. Bavananthan Nadarasa og hr. Gnanaseelan Mariyampillai for deres tætte samarbejde om indsamlingen af oplysninger om foreningens bestyrelsesmedlemmer gennem tiden samt arbejdet med foreningens arkiver, og til hr. Tharnigan Chandrakumar for hjælp med forside design og oversættelse til dansk.
Jeg har et stærkt håb og en tro på, at den anden og tredje generation af tamilere i Nyborg vil føre foreningen videre med samme engagement. Jeg ønsker af hele mit hjerte, at Nyborg Tamilsk Sports Klub, som træder ind i sit 40. år, vil fortsætte med at blomstre i mange år fremover.
Tak.

Robert Kennedy Anthonipillai
Programansvarlig
40-års jubilæumsudvalg

நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்தின் வரலாறு

இது எங்களின் கதை. நியுபோ தமிழர்களின் கதை. நியுபோ தமிழர் விளையாட்டுக் கழகத்தின் வரலாறு.

1986 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் உள்நாட்டுப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமது. இலங்கையின் வடக்குக், கிழக்குப் பகுதிகளில் இருந்து தமிழர்கள் உலகின் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒரு பகுதியினர் டென்மார்க் நாட்டை வந்தடைந்தனர். வந்துசேர்ந்ததும் அகதி முகாம்களில் விடப்பட்டோம். பின்பு டென்மார்க்கின் கலாச்சாரத்தை படிப்பதற்காக பாடசாலைகளிற்கு அனுப்பப்பட்டோம்.

1986 ஆம் ஆண்டு கோடை காலமளவில் முதன்முதலாக நியுபோ நகரத்தில் காலடியை வைத்தோம். அன்று நியுபோவில் காலடியை வைத்த நாங்கள்தான் இன்று இரண்டு மூன்று தலைமுறைகள் தாண்டி எங்கள் குடும்பங்களுடன் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நியுபோவிற்கு வந்த தமிழர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களாக இருந்தோம். நாங்கள் காலையில் டெனிஸ் மொழி படிக்கப் போவோம். மாலை வேளைகளில் பந்தை எடுத்து கொண்டு கிறிக்கெற், உதைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டமென சிறுசிறு குழுக்களாக வெவ்வேறு இடங்களில் விளையாடிக்கொண்டிருந்தோம்.

நியுபோ கோட்டையின் நீரோடை அதாவது Voldgrave இற்கு அருகில் உள்ள சிறிய மைதானத்தில் எம்மில் சிலர் ஒன்றுகூடினோம். ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் உதைபந்தாட்டத்தில் ஆர்வமுள்ளோர் பயிற்சி எடுப்பது வழக்கமாக இருந்தது. அவ்வாறு விளையாடிக் கொண்டிருந்த எமக்கு ஒரு நாள் நாங்கள் ஒரு விளையாட்டுக் கழகம் அமைக்க வேண்டுமென்று ஒரு சிந்தனை தோன்றியது. அச் சிந்தனைப்படி 1987 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் விளையாட்டு வீரர்கள் நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டத்தை கூட்ட முடிவெடுத்தோம். அம் முடிவின்படி நியுபோ நகரில் உள்ள தமிழ் மக்களுக்கு அறிவித்து உதைபந்தாட்டம் விளையாடும் அதே மைதானத்தில் இளைஞர்களால் முதல் கூட்டம் நடத்தப்பட்டது.

அக்கூட்டத்தில் கழகத்திற்கானசட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டு முதல் நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. இம் முதல் நிர்வாகசபையின் தலைவராக திரு. இராதாகிருஷ்ணன் அம்பல வாணப்பிள்ளை , செயலாளராக திரு. றொபேட் கெனடி அந்தோனிப்பிள்ளை, பொருளாளராக திரு. மரியசீலன் மரியதாஸ், உப பொருளாளராக திரு. தெட்சணாமூர்த்தி தங்கவடிவேல், உதை பந்தாட்டத் தலைவராக திரு. நாகரட்ணம் பொன்னுத்துரை, உபஉதைபந்தாட்டத் தலைவராக திரு. உதயகுமார் சற்குணசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவரது ஒப்புதலோடு

கழகத்தின் பெயர் உருவாக்கப்பட்டது. அன்றுதான் எங்கள் நியுபோ தமிழர் விளையாட்டு கழகம் பிறந்தநாள். அதாவது எங்கள் NTSK என்ற குழந்தை பிறந்தநாள். ஒரு கழகத்தை கொண்டு நடாத்துவதற்கு பணம் எவ்வளவு முக்கியம் என்பது யாவரும் அறிந்ததே. அப்போது நாட்டிற்கு வந்து குறுகிய காலம் என்பதால் விளையாடும் இளைஞர்களாகிய எம்மிடம் அவ்வளவு பெரிதாக பணவசதி இருக்க வில்லை. அதனால் நியுபோ தமிழ்மக்களிடம்

வீடு வீடாகச் சென்று உதவி கேட்க அவர்களில் பெரும் பாலானோர் சிறியதொகையென்றாலும் உதவிகள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தொடங்கிய கழகம் ஆரம்பகாலத்தில் அதாவது 1987 , 1988 ஆம் ஆண்டுகளில் எங்கள் அயல் நகரங்களான மிடில்பாட் , சிவன்போ , மற்றும் போபோ போன்ற நகரங்களில் இருந்த தமிழர் விளையாட்டுக் கழகங்களுடனான நட்பு ரீதியான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிகள் தோல்விகள் என்று சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது.

அந்தக்காலப்பகுதியில் டென்மார்க்கில் பல இடங்களில் தமிழர் விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெற ஆரம்பித்தன. நாங்களும் அதில் பங்கேற்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். அதனைத் தொடர்ந்து சிறுகச் சிறுக சேர்த்த பணத்தைக்கொண்டு எங்கள் கழகத்திற்கான முதல் சீருடையை வாங்கினோம். 1989 ஆம் ஆண்டு கோடை காலமளவில் கிறின்ஸ்ரட் நகரில் நடைபெற்ற Jaffna cup 11 பேர்கொண்ட ஒரு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதல் முறையாக பங்குபற்றினோம். ஆரம்பத்தில் எமது கழகம் சுற்றுப்போட்டிகளில் பெரியளவில் வெற்றிகளைப் பெறவில்லை. அதற்கான காரணம் டென்மார்க்கில் இயங்கிய மற்றைய கழகங்கள் விளையாட்டு வீரர்களை வெவ்வேறு நகரங்களில் இருந்து தெரிவு செய்து எடுத்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஆனால் எமது கழகம் நியுபோ நகர எல்லைக்குள் இருந்த விளையாட்டு வீரர்களை மட்டுமே இணைத்து விளையாட வேண்டும் என்ற சட்டத்தை ஆரம்பத்தில் இருந்தே நடைமுறைப்படுத்தினோம். இன்று 40 ஆண்டுகள் கடந்தும் அந்த சட்டத்தின் படி இயங்குவது எங்கள் கழகத்திற்கும் நியுபோ தமிழ் மக்களுக்கும் பெருமையே.

1990 ஆம் ஆண்டு டென்மார்க்கில் TBU அதாவது தமிழர் விளையாட்டுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த சங்கத்தின் வளர்ச்சிக்கு எமது கழகம் பெரும் பங்காற்றியது. தமதுசொந்த நகர விளையாட்டு வீரர்களை மட்டுமே தேர்வு செய்து விளையாடும் ஒரே கழகம் NTSK என்று அந்த சங்கத்தால் பல தடவை பாராட்டப்பட்டது எமக்கெல்லாம் பேருவகையை அளித்த விடயமாகும்.

1991 ஆம் ஆண்டு தமிழர் விளையாட் டுச்சங்கத்தால் நடாத்தப்பட்ட TBU cup, 11 பேர் கொண்ட லீக் (Liga)முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியாகும். இப்போட்டியில் இறுதிச்சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டு அதில் இரண்டாவது இடத்தைப் பெற்று எமது கழகம் தனது முதன்முதலாவது வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்

கொண்டது. இவ்விறுதியாட்டம் ஈக்காஸ்ற் நகரில் நடைபெற்றது. அவ்வாட்டத்தைப் பார்க்கநூற்றுக்கணக்கான நியுபோ தமிழ் மக்கள் பேருந்தில் மைதானத்திற்கு வந்திறங்கினர். எம் நகர மக்கள் பார்வையாளர்களாக கலந்து கொண்டு ஊக்குவித்தமை விளையாட்டு வீரர்களாகிய எமக்கு உற்சாகத்தை அளித்திருந்தது. அதனைத் தொடர்ந்து கோசன்ஸ் தமிழர் விளையாட்டு கழகத்தால் 9 பேர் கொண்ட ஒரு நாள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இது Horsenscup ஆகும். இது ஒரு சுழல் கிண்ணம். அக்கிண்ணத்தை தொடர்ந்து மூன்று முறை அதாவது 1992 , 1993 , 1994 ஆம் ஆண்டுகளில் இரண்டாவது வெற்றிக்கிண்ணத்தை எமது கழகம் வென்று சொந்தமாக்கிக் கொண்டது. இவ்விடயம் அக்காலத்தில் டென்மார்க் தமிழர்விளையாட்டரங்கில் மாபெரும் சாதனையாகப் பார்க்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இக்கிண்ணத்தை மீண்டும் இரு தடவை அதாவது 1996 , 2007 ஆம் ஆண்டுகளில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகி இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது. இந்தக் காலப்பகுதியில் Fyn மாநிலத்தில் இயங்கிய ஏனைய தமிழர் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியான Fyn cup பை எமது கழகமே உருவாக்கி நடத்தியிருந்தது. அச்சுற்றுப்போட்டியில் ஒவ்வொரு தடவையும் முதலாவது வெற்றிக்கிண்ணத்தைப் பெற்று Fyn மாநிலத்தில் சிறந்த விளையாட்டு கழகம் என்ற பெருமையை பெற்றிருந்தமைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். டென்மார்க் தமிழர் விளையாட்டு கழகங்களுக்கிடையே மிகவும் பழமையானதும் மிகவும் உயர்வானதாகவும் பார்க்கப்பட்ட 11 பேர் கொண்ட ஒரு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி Jaffna cup ஆகும். இக்கிண்ணத்தை 1993 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் இறுதிச்சுற்றுக்கு தெரிவாகி இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டோம். அது மட்டுமன்றி எமது கழகம் இச்சுற்றுப் போட்டியை நடாத்தும் தகுதி பெற்று எமது நகரான நியுபோவில் உள்ள Frørup விளையாட்டு மைதானத்தில் நடாத்தியமை எமது கழகவரலாற்றில் இதுவொரு சிறப்பு மிக்க நிகழ்வாக பார்க்கப்பட்டது. இப்படியாக எமது கழகம் வெற்றிகளைப் பெற்று மெல்ல மெல்ல வளர்ந்து வந்தது. ஆனால் எமது கழகச் சின்னத்தோடு எம்மிடம் சீருடை இருக்கவில்லை. விளையாட்டு வீரர்களாகிய எமக்குப் புதிதாக கழகச்சீருடை வாங்க விருப்பம் இருந்தாலும் கழகத்திடம் அதற்கான பொருளாதார வசதி இருக்கவில்லை. அக்காலப்பகுதியில் உதைபந்தாட்டப் பொறுப்பாளராக இருந்தவரால் அவர் வேலை செய்த Skan Holz என்ற மரத்தொழிற்சாலையில் ஒரு வாரத்தின் சனி , ஞாயிறு தினங்களில் எல்லா விளையாட்டு வீரர்களும் சேர்ந்து வேலை செய்து கொடுத்து சீருடை வாங்குவதற்கு தொழிற்சாலையில் அனுமதி கேட்கப்பட்டது.

அவரின் ஆலோசனைப்படி உதைப்பந்தாட்ட வீரர்கள் உழைத்துக் கழகத்திற்கான சீருடையை வாங்கினர். அச்சீருடையில்தான் கழகச் சின்னம் திரு. றொபேட்கெனடி அந்தோனிப்பிள்ளை மற்றும் திரு. பவானந்தன் நடராஜா இருவராலும் 1994 ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டு முதல் முதலாக பொறிக்கப்பட்டது. அச் சின்னம் வடிவமைக்கப்பட்ட போது நியுபோவிற்கு

தமிழர்கள் எந்த ஆண்டில் வந்தனர் என்பதை எங்கள் பரம்பரைக்கு தெரியப்படுத்தும் நோக்கில் 1986 என்று பொறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 1995 ஆம் ஆண்டு தமிழ் எழுத்துகள் சேர்க்கப்பட்டதோடு 2023 ஆம் ஆண்டு எங்கள் கழகத்தின் மூன்று விளையாட்டு குறியீடுகளும் சேர்க்கப்பட்டு மென்மேலும் மெருகூட்டப்பட்டு தற்போதைய கழகச் சின்னம் எங்கள் கண் முன் அழகாக இருக்கிறது.

கழகம் ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை எமது கழகத்தில் விளையாட்டு வீரர்கள் பற்றாக்குறை என்பது சிக்கலாக இருந்தது. அதனால் தான் இரண்டாவது வெற்றிக்கிண்ணங்களை தாண்டி போவதில் சிறிது சிரமம் ஏற்பட்டது. ஆனால் எமது கழகத்தில் இரண்டாந் தலைமுறை வீரர்கள் விளையாடியதால் 1995 ம்ஆண்டில் கிறின்ஸ்ரட் நகரில் நடைபெற்ற 7 பேர் கொண்ட ஒரு நாள் உதைபந்தாட்டப்போட்டியில் முதல் முறையாக முதலாவது இடத்தைப் பெற்று எமது கழகம் மாபெரும்சாதனையைப் படைத்தது.

அது மட்டுமல்லாமல் எத்தனையோ உள்ள ரங்க உதைபந்தாட்ட போட்டிகளில் கழகம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை பல நூற்றுக்கணக்கான வெற்றிக்கிண்ணங்களை வென்று டென்மார்க்கில் NTSK கழகம் தனக்கென ஒரு அழியாத அடையாளத்தை உருவாக்கி இருக்கிறது என்பதை ஒவ்வொரு நியுபோ தமிழரும் பெருமை கொள்ள வேண்டும்.

2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியுபோ தமிழ்ப்பெண்கள் பலர் விளையாட்டில் ஆர்வம் செலுத்தத் தொடங்கினர் . இவர்களின் வருகையை வரவேற்று பெண்களுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டும் என்ற உயர்சிந்தனையை NTSK கழகம் முன்னெடுத்தது.இதன்படி ஆரம்பத்தில் பெண்கள் உதை பந்தாட்டப் பிரிவு ஒன்றை உருவாக்கிஅவர் களுக்கான பயிற்சியும் அளிக்கப் பட்டது அன்றிலிருந்து இன்று வரை பல பெண்கள் பூப்பந்தாட்டத்திலும் இணைந்து பயிற்சி பெற்று வருகின்றனர். அது மட்டுமல்லாமல் பல சுற்றுப்போட்டிகளிலும் பங்கேற்று வெற்றிக்கிண்ணங்களையும் வென்று NTSK கழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். NTSK உதைபந்தாட்ட வரலாற்றில் மிக நீண்ட இடைவெளிக்கு பின்னர் மீண்டும் எங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறை விளையாட்டு வீரர்கள் பலரின் வருகையும் எழுச்சியும் ஏற்பட்டது. இதன் விளைவாக 2019 ஆண்டு கிறின்ரட் நகரில் நடைபெற்ற தமிழீழ கரும்புலிகள் ஞாபகார்த்த 7 பேர் கொண்ட ஒரு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வு டென்மார்க் உதைபந்தாட்ட அரங்கில் NTSK கழகம் மீண்டும் முன்னணிக் கழகங்களின் வரிசையில் இருப்பதாகப் பேசப்பட்டது. எமது கழகம் முன்னர் ஒரு சில முறை டென்மார்க் தழுவிய உள்ளரங்க மற்றும் வெளியரங்க உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளை நடத்தியிருந்தது யாவரும் அறிந்ததே. அதன்தொடர்ச்சியாக 2019 ஆம் ஆண்டு நியுபோவில் உள்ள Vindinge விளையாட்டு மைதானத்தில் வெளியரங்க உதைபந்தாட்டச் சுற்றப்போட்டி Storebælt cup பை நடத்தியிருந்தனர். இச்சுற்றுப்போட்டி 7 பேர் கொண்ட ஒரு நாள் சுற்றுப்போட்டி என்பதால் இதில் டென்மார்க்கின்

பலபாகங்களில் இருந்தும் விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றியிருந்தனர். பின்னர் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக சிறிய இடைவெளி ஏற்பட்டது. மீண்டும் துடிப்பான இளைஞர்களால் 2024 ஆம் ஆண்டு முதல் 5 பேர் கொண்ட உள்ளரங்க உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி Futsal Storebælt cup பை தொடங்கி நடாத்தி வருகிறார்கள். இச் சுற்றுப்போட்டி இனி வருங்காலங்களிலும் தொடர்ந்து நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

கரப்பந்தாட்ட வரலாறு.

ஆரம்பத்தில் இருந்தே நியுபோ தமிழர் கரப்பந் தாட்டக் கழகம் என்ற பெயரில் கரப்பந்தாட்டம் சிறப்பாகச் செயற்பட்டு வந்தது.அந்தக் காலத்தில் கரப்பந்தாட்டக் கழகமே நியுபோ நகரசபையில் முதன்முதலாகப் பதிவுசெய்யப்பட்ட கழகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் ஆகிய இரண்டு விளையாட்டையும் விளையாடும் வீரர்கள் பலர் இருந்ததால் அவர்களின் முயற்சியால் 1993 ஆம் ஆண்டு கரப்பந்தாட்டம் NTSK கழகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு ஒன்றிணைந்து இயங்கத் தொடங்கியது. எமது கரப்பந்தாட்டக்கழகம் 1989 ஆம் ஆண்டில் போபோ தமிழர் கரப்பந்தாட்டக் கழகத்துடன் நட்பு ரீதியான போட்டியைதொடங்கியது. அப்போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றது.வெற்றி பெற்றபின் சுற்றுப் போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளை தயார் செய்து கொண்டு டென்மார்க்கின் பல நகரங்களில் குளிர் காலப்பகுதியில் நடைபெற்ற கரப்பந்தாட்டபோட்டிகளில் பங்கேற்று வந்தது. ஆரம்பத்தில் அவ்வளவாக வெற்றிகளை ஈட்டவில்லை. தொடர்ந்து விடாமுயற்சியோடு போட்டிகளில் பங்கேற்று 1993 ஆம் ஆண்டு ஈக்காஸ்ற் தமிழர் கரப்பந்தாட்ட கழகத்தால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் இறு திப் போட்டிக்கு முன்னேறி இரண்டாம் இடத்தைப்பெற்று எமது கழகத்திற்கு பெருமை சேர்த்தது. இந்த வெற்றியைத் தொடர்ந்து Fyn மாநிலத்தில் இயங்கிய ஏனைய தமிழர் கரப்பந்தாட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான ஒரு நாள் கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியான Fyn cup ஐ எமது கழகமே உருவாக்கி நடாத்தியது. அச்சுற்றுப்போட்டியில் ஒவ்வொரு தடவையும் முதலாவது வெற்றிக்கிண்ணத்தைப் எமது கழகமே பெற்று Fyn மாநிலத்தின் சிறந்தவிளையாட்டுக் கழகம் என்ற பெருமையை பெற்றுத்தந்தது. உதைபந்தாட்டத்தைப் போல் கரப்பந்தாட்டமும் எமது கழகத்திற்கு வலுச்சேர்த்தது.

அதனைத் தொடர்ந்து டென்மார்க் தழுவிய பல சுற்றுப்போட்டிகளில் இரண்டாவது மூன்றாவது வெற்றிக்கிண்ணங்களை பல தடவை பெற்றிருந்தது. 1997 ஆம் ஆண்டு மீண்டும் ஈக்காஸ்ற் தமிழர் கரப்பந்தாட்ட கழகம் நடாத்திய சுற்றுப்போட்டியில் முதலாவது இடத்தை பெற்றுச் சாதனை படைத்தது. அது மட்டுமல்லாமல் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நான்கு கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளிலும் முதலாவது இடத்தைப் பெற்றது. இந்நிகழ்வு டென்மார்க் கரப்பந்தாட்ட வரலாற்றில் எமது கழகம் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதைக் காட்டி நிற்கிறது. அதன் பின்னர் 1995 ஆம் ஆண்டு

டென்மார்க் தழுவிய கரப்பந்தாட்ச் சுற்றுப்போட்டி Storebælt cup ஐ எமது கழகமே ஆரம்பித்து இன்று வரை 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திவருகிறது. அச்சுற்றுப் போட்டியில் பல தடவைகள் இரண் டாவது மற்றும் மூன்றாவது இடங்களைக் கைப்பற்றியதோடு மட்டுமல்லாமல் கடந்த 2024 ஆம் ஆண்டில் முதலாவது இடத்தை வென்று சாதனை படைத்திருந்தது.டென்மார்க் தமிழர் கரப்பந்தாட்ட வரலாற்றில் அன்று தொட்டு இன்று வரை NTSK கழகம் எத்தனையோ நூற்றுக்கணக்கான வெற்றிக்கிண்ணங்களை வென்று முன்னணிக்கழகங்களில் ஒன்றாக திகழ்வது நியுபோ தமிழர்கள் அனைவருக்கும் பெருமையே.

பூப்பந்தாட்ட வரலாறு.

மிக நீண்ட காலமாக NTSK இன் கரப்பந்தாட்ட பயிற்சி நேரங்களில் அவர்களின் அனுமதியோடு ஒரு சிலர் பூப்பந்தாட்டப் பயிற்சி எடுத்து வந்தனர். பூப்பந்தாட்டத்தில் மிகவும் ஆர்வம் கொண்ட அவர்கள் பல முறை தங்களையும் NTSK இல் இணைத்துக் கொள்ளும்படி கோரிக்கை வைத்தனர். பின்னர் அவர்களின் வேண்டுகோளுக்கிணக்க 2004 ஆம் ஆண்டுகளில் தற்காலிகமாக NTSK கழகத்தில் இணைக்கப்பட்டு ஒரு வருடம் மிக சிறப்பாக செயல்பட்டு 2005 ஆம் ஆண்டில் பூப்பந்தாட்டம் NTSK வின் ஒரு அங்கமாக மாறியது. அதில் இருந்து சிறியோர் முதல் முதியோர் வரை பெண்கள் ஆண்கள் எனப் பலரும் இதில் இணைந்து பயிற்சி பெற்று வந்தனர். 2007 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது கழகத்தில் வீரர்கள் பற்றாக்குறை இருந்தது. டென்மார்க் முழுவதும் இருந்த தமிழர் விளையாட்டுக் கழகங்கள் மத்தியில் உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் பெரிதளவில் நடைபெறவில்லை. இக்காலகட்டத்தில் டென்மார்க்கில் பல தமிழர் விளையாட்டு கழகங்கள் காணாமல் போய்விட்டது. ஆனால் எமது கழகத்தை அந்தகாலப் பகுதி யிலும் தொடர்ந்து இயங்குவதற்கு பெரும் பங்காற்றியது எமது பூப்பந்தாட்டமே. இதை நியுபோ தமிழராகிய நாம் பெருமையுடன் நினைவுகூரவேண்டும்.

பின்னர் 2015 ஆம் ஆண்டளவில் டென்மார்க்கின் பல நகரங்களில் பூப்பந்தாட்டக் கழகங்கள் உருவாகி சுற்றுப் போட்டிகள் நடாத்தத் தொடங்கினர். அதில் எமது கழகவீரர்கள்,வீராங்கனைகள் பலர் பங்குபற்றி மிகவும் சிறப்பாக விளையாடி பலவெற்றிக்கிண்ணங்களைப் பெற்று எமது கழகத்திற்கு மென் மேலும் பெருமை சேர்த்தனர். அதனைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு டென்மார்க் தழுவிய பல பிரிவுகளைக் கொண்ட பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி Storebælt cup ஐ எமது கழகமே தொடங்கி இன்று வரை நடாத்தி வருகின்றது. அதிலும் எமது கழக வீரர்கள்,வீராங்கனைகள் பலர் பங்கு பற்றி மிகவும் சிறப்பாக விளையாடி எண்ணற்ற வெற்றிக்கிண்ணங்களை வென்று வருவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாமல் சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுத்து உலகத்தமிழர் பூப்பந்தாட்டச் சம்மேளனம் WTBF நடாத்தும் உலகத்தமிழர் பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளுக்குஅனுப்பி வைத்தனர். அவற்றிலும் பல பிரிவுகளில் பதக்கங்களை வென்று பலர் சாதனைபடைத்துள்ளனர். உலகத்தமிழர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற

இச்சுற்றுப்போட்டி 2018 ஆம் ஆண்டு எமது கழகத்தின் அனுசரணையோடு WTBF தலமை நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட சுற்றுப்போட்டிக் குழுவின் தலைமையில் எமது நியுபோ நகரில் நடைபெற்றது. இந் நிகழ்வை சிறப்பாக நடாத்தியதாக உலகத் தமிழர் பலரால் எமது கழகத்தையும் எமது நகரத்தையும் பலதடவை பெரிதும் பாராட்டியிருந்தமை நியுபோ தமிழர்களாகிய எங்கள் அனைவருக்கும் பெருமையே.

சாதனைகளும் இணைந்த செயல்பாடுகளும்.

பூப்பந்தாட்டத்தில் மட்டுமல்ல உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டத்திலும் சிறந்த விளையாட்டு வீரர்களை தேர்ந்தெடுத்து பல ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா போன்ற நாடுகளில் நடைபெறும் சர்வதேச சுற்றுப் போட்டிகளுக்கு அனுப்பியிருந்தனர். அத்தோடு டென்மார்க் தமிழர்கள் சார்பாக வெளிநாடுகளுக்கு சென்று விளையாடும் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்ட குழுவிலும் எமது கழக வீரர்கள் பலர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இச்சுற்றுப் போட்டிகளிலும் எமது கழக வீரர்கள் பல தடவை வெற்றிக்கிண்ணங்களை வென்றதோடு சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான பதக்கங்களையும் வென்று எமது கழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இம் மூன்று விளையாட்டுக்களையும் திறம்பட மிகச்சிறப்பாக இயக்கி வரும் எமது கழகம்,1994 ஆம் ஆண்டு முதல் நியுபோ தமிழ் மக்கள் எல்லோரையும் உள்ளடக்கிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளையும் ஆண்டிற்கு ஒரு முறை நடாத்தி வந்தனர். ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் நியுபோவில் உள்ள எல்லா தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து விளையாடி உண்டு மகிழ்ந்தது இப்போதும் எங்கள் எல்லோர் மனதிலும் அழியாத நினைவுகளாக உள்ளது. பின்னர் மக்களின் ஆதரவு பெரிதளவு இல்லாத காரணத்தால் அங்கத்தவர்களுக்கான கோடைகால இறுதி நாள் நிகழ்வாக மாற்றப்பட்டு இன்று வரை நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் எமது அடுத்த தலைமுறையை விளையாட்டில் ஊக்குவிக்கும் நோக்கில் வருடத்தில் இரண்டு முறை குடும்ப விளையாட்டு நாள் என அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இது தற்போது நிர்வாகத்தில் இருக்கும் நியுபோ தமிழ் இளம் சமுதாயத்தின் எமது கழகம் பற்றிய தூர நோக்குச் சிந்தனையாகப் பார்க்கப்படுகிறது. எமது கழகத்தின் முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுவது 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவாகும். இவ் விழாவை அந்த ஆண்டின் நிர்வாகசபை மிக சிறப்பாக நடாத்தியிருந்தார்கள். வெளியரங்க விளையாட்டுகள், உள்ளரங்க விளையாட்டுகள் பின்னர் இரவு கலைநிகழ்ச்சிகள், பழைய விளையாட்டு வீரர்கள் மதிப்பளிப்பு, மற்றும் எமது கழக வெற்றிக்கிண்ணங்கள் கண்காட்சி என நியுபோ தமிழர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து மிகவும் சிறப்பாக நடாத்தி இருந்தனர். எமது கழகத்திற்கு நிதி திரட்டும் நோக்கில் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நியுபோ திரையரங்கில் பல முறை தமிழ்த்திரைப்படங்கள் காண்பித்து பெருந்தொகை இலாபத்தை ஈட்டினோம். பின்னர் எமது கழக சுற்றுப் போட்டியான Storebæltcup நடத்திய போது பலமுறை

உணவகம் நடத்தியதில் பெரும் தொகை இலாபம் கிடைத்தது.

இதன் தொடர்ச்சியாக 2022 ஆம் ஆண்டில் டென்மார்க் நாட்டு மக்களால் பெரிதும் கொண்டாடப்பட்ட நிகழ்வு Tour de France. இந்த உலகப்புகழ் பெற்ற துவிச்சக்கர வண்டி ஓட்டப்பந்தயத்தின் இரண்டாம் நாள் எமது நியுபோ நகரில் முடிவடைந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் எமது கழகத்திற்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி பார்வையாளர்களுக்கான உணவு, குடிபானங்கள் மற்றும் மதுபானங்கள் விற்பனை செய்து 60 ஆயிரம்குரோணர்களுக்கு மேல் இலாபம் ஈட்டினோம். அதன்பின்னர் 2025 ஆம் ஆண்டு முதல் DMU Badminton மற்றும் Tinderbox போன்றவற்றிலும் கலந்து கொண்டு பெரும் தொகையான பணத்தை இலாபமாகப் பெற்றோம். இப்படியாக எமது கழகத் தொண்டர்கள் மற்றும் அந்தந்த ஆண்டின் நிர்வாகசபைகள் பெரும் சாதனைகளை படைத்திருந்தோம். இப்படிப்பட்ட நிகழ்வுகள் தான் எமது கழகத்தை பொருளாதாரத்தில் மிகவும் வலுவான நிலைக்கு உயர்த்தியது என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை.

ஒரு கட்டமைப்பு நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்க வேண்டுமானால் அது அந்தந்தக் காலமாற்றத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அந்த வகையில் எமது கழகம் தற்போதைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றாற்போல் தன்னை மாற்றிக் கொண்டு வந்துள்ளது. அதன் ஒரு கட்டமாக 2015 ஆம் ஆண்டு www.ntsk.dk என்ற எமது கழக இணையத்தளம் உருவாக்கப்பட்டது. அதிலிருந்து இவ்விணையத் தளத்தில் எமது கழகம் சார்ந்த சகல விடயங்களும் பதிவிடப்பட்டு இன்று வரை மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது.

டென்மார்க்கிலேயே எமது கழகம் மட்டுமே மிகவும் சிறப்பான முறையில் மூன்று விளையாட்டுக்களையும் இணைத்து, எமது நியுபோ எல்லைக்குட்பட்ட வீரர்களை மட்டும் உள்ளடக்கி, இறுக்கமான சட்ட திட்டங்கள் அடங்கிய யாப்பை கொண்டு, மூன்று விளையாட்டுக்களுக்கும் டென்மார்க் தழுவிய சுற்றுப்போட்டிகளை நடாத்தி வருகிறது. அத்தோடு பிள்ளைகளுக்கான குடும்பநாள், அங்கத்தவர்களுக்கான கோடைகால இறுதி விளையாட்டுப்போட்டி, ஆண்டு இறுதி கொண்டாட்டம், மற்றும் ஒவ்வொரு ஆண்டும் தை முதல் வார இறுதி நாளில் பொதுக்கூட்டம் என்று சிறந்த கட்டமைப்புக்களுடனும் இயங்கிவருகிறது. இன்று 40 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது எங்கள் நியுபோ தமிழர் விளையாட்டு கழகம். இப்பெரு வெற்றியில் இதற்காக உழைத்த ஒவ்வொரு நியுபோ தமிழருக்கும் பங்குண்டு.

Historien om Nyborg Tamilsk Sports Klub

Dette er vores historie – historien om tamilerne i Nyborg og om Nyborg Tamilsk Sports klub.
I 1986 var Sri Lanka præget af borgerkrig. I denne periode udvandrede mange tamiler fra landets nordlige og østlige områder til forskellige lande verden over.
En del af dem ankom til Danmark, hvor de i de første måneder opholdt sig i flygtningelejre og deltog i undervisning på forskellige skoler for at lære den danske kultur at kende.
I sommeren 1986 satte vi vores første fod i byen Nyborg.
Det var den første generation af tamiler, der satte fod i Nyborg den dag, og i dag bor vi her stadig med vores familier – nu gennem to til tre generationer.
De fleste af os tamiler, der kom til Nyborg, var unge mennesker. Om morgenen studerede vi dansk og aftenen tog vi bolden med og spillede fodbold, cricket og volley i små grupper forskellige steder.
Nogle af os samledes på en lille plads nær voldgraven ved Nyborg Slot.
Det var almindeligt på det tidspunkt, at de fodboldinteresserede trænede hver aften. Mens vi spillede på den måde, fik vi en dag idéen om at danne en sportsklub.
På baggrund af denne idé besluttede vi som sportsudøvere at samles i sommeren 1987.
Tamilerne i Nyborg blev informeret om beslutningen, og det første møde blev afholdt af de unge på den samme plads, hvor vi plejede at spille fodbold.
På dette møde blev klubbens vedtægter udarbejdet, og den første bestyrelse blev valgt. Bestyrelsen bestod af Radhakrishnan Ambalavanapillai som formand, Robert Kennedy Anthonipillai som sekretær, Mariyaseelan Mariyathas som kasserer, Thadshanamoorthy Thangavadivelu som næstkasserer, Nagaratnam Ponnuthurai som fodboldansvarlig samt Uthayakumar Satkunasingam som fodboldassistent.
Derefter blev klubbens navn dannet med godkendelse fra alle, der deltog i mødet.
Den dag var fødslen for Nyborg Tamilsk Sports Klub. Fødslen for vores hjertebarn NTSK.
